ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த பெரிய திருமொழி

# 10.4 – சந்தமலர்க்குழல்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# 10.4 – சந்தமலர்க்குழல்

‡ சந்த மலர்க் குழல் தாழத் ⋆
தான் உகந்தோடித் தனியே வந்து ⋆
என் முலைத் தடம் தன்னை வாங்கி ⋆
நின் வாயில் மடுத்து ⋆
நந்தன் பெறப் பெற்ற நம்பீ ! ⋆
நான் உகந்துண்ணும் அமுதே ⋆
எந்தை பெருமானே ! உண்ணாய் ⋆
என் அம்மம் சேமம் உண்ணாயே ॥ **10.4.1** ॥

வங்க மறி கடல் வண்ணா ! ⋆
மா முகிலே ஒக்கும் நம்பீ ⋆
செங்கண் நெடிய திருவே ⋆
செங்கமலம் புரை வாயா ⋆
கொங்கை சுரந்திட உன்னைக் ⋆
கூவியும் காணாதிருந்தேன் ⋆
எங்கிருந்தாயர்களோடும் ⋆
என் விளையாடுகின்றாயே ॥ **10.4.2** ॥

திருவில் பொலிந்த எழில் ஆர் ⋆
ஆயர் தம் பிள்ளைகளோடு ⋆
தெருவில் திளைக்கின்ற நம்பீ ⋆
செய்கின்ற தீமைகள் கண்டிட்டு ⋆
உருகி என் கொங்கையின் தீம் பால் ⋆

ஓட்டந்து பாய்ந்திடுகின்ற ⋆
மருவிக் குடங்கால் இருந்து ⋆
வாய் முலை உண்ண நீ வாராய் ‖ **10.4.3** ‖

மக்கள் பெறு தவம் போலும் ⋆
வையத்து வாழும் மடவார் ⋆
மக்கள் பிறர் கண்ணுக்கொக்கும் ⋆
முதல்வா மதக் களிறன்னாய் ⋆
செக்கர் இளம் பிறை தன்னை வாங்கி ⋆
நின் கையில் தருவன் ⋆
ஒக்கலை மேல் இருந்தம்மம் உகந்து ⋆
இனிதுண்ண நீ வாராய் ‖ **10.4.4** ‖

மைத்த கருங்குஞ்சி மைந்தா ! ⋆
மா மருதூடு நடந்தாய் ⋆
வித்தகனே விரையாதே ⋆
வெண்ணெய் விழுங்கும் விகிர்தா ⋆
இத்தனை போதன்றி என்தன் ⋆
கொங்கை சுரந்திருக்ககில்லா ⋆
உத்தமனே ! அம்மம் உண்ணாய் ⋆
உலகளந்தாய் ! அம்மம் உண்ணாய் ‖ **10.4.5** ‖

பிள்ளைகள் செய்வன செய்யாய் ⋆
பேசின் பெரிதும் வலியை ⋆
கள்ளம் மனத்தில் உடையை ⋆
காணவே தீமைகள் செய்தி ⋆
உள்ளம் உருகி என் கொங்கை ⋆
ஓட்டந்து பாய்ந்திடுகின்ற ⋆

பள்ளிக் குறிப்புச் செய்யாதே ⋆
பால் அமுதுண்ண நீ வாராய் ‖ **10.4.6** ‖

தன் மகன் ஆக வன் பேய்ச்சி ⋆
தான் முலை உண்ணக் கொடுக்க ⋆
வன் மகன் ஆய் அவள் ஆவி வாங்கி ⋆
முலை உண்ட நம்பி ⋆
நன் மகள் ஆய் மகளோடு ⋆
நானில மங்கை மணாளா ⋆
என் மகனே ! அம்மம் உண்ணாய் ⋆
என் அம்மம் சேமம் உண்ணாயே ‖ **10.4.7** ‖

உந்தம் அடிகள் முனிவர் ⋆
உன்னை நான் என் கையில் கோலால் ⋆
நொந்திட மோதவுங்கில்லேன் ⋆
நுங்கள் தம் ஆநிரை எல்லாம் ⋆
வந்து புகுதரும் போது ⋆
வானிடைத் தெய்வங்கள் காண ⋆
அந்தியம் போதங்கு நில்லேல் ⋆
ஆழியம் கையனே ! வாராய் ‖ **10.4.8** ‖

பெற்றத் தலைவன் எம் கோமான் ⋆
பேர் அருளாளன் மதலாய் ⋆
சுற்றக் குழாத்திளங்கோவே ! ⋆
தோன்றிய தொல் புகழாளா ⋆
கற்றினந் தோறும் மறித்துக் ⋆
கானம் திரிந்த களிறே ⋆

எற்றுக்கென் அம்மம் உண்ணாதே ⋆
எம்பெருமான் இருந்தாயே ॥ **10.4.9** ॥

‡ இம்மை இடர் கெட வேண்டி ⋆
ஏந்தெழில் தோள் கலிகன்றி ⋆
செம்மைப் பனுவல் நூல் கொண்டு ⋆
செங்கண் நெடியவன் தன்னை ⋆
அம்மம் உண் என்றுரைக்கின்ற ⋆
பாடல் இவை ஐந்தும் ஐந்தும் ⋆
மெய்ம்மை மனத்து வைத்தேத்த ⋆
விண்ணவர் ஆகலும் ஆமே ॥ **10.4.10** ॥

அடிவரவு — சந்தம் வங்கம் திருவில் மக்கள் மைத்த பிள்ளைகள் தன்மகன் உந்தம் பெற்றம் இம்மை பூங்கோதை

சந்தமலர்க்குழல் முற்றிற்று

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்